**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.67/2018**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.3 சேட்டு, வயது 45, த/பெ சுப்பிரமணி**

**நேரம் -12.05**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 6 மற்றும் 7 தரப்பு)**

நான் ஆரணி துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எப்போது ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணியில் சேர்ந்தேன் என்றால் ஏப்ரல் மாதம் 2025ம் வருடம் பணியில் சேர்ந்தேன். ஆரணி தாலுக்கா, புலவன்பாடி கிராமத்தில் புஞ்சை சர்வே எண்.367/1 உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புஞ்சை சர்வே எண்.367/1 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புஞ்சை சர்வே எண்.367/1 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது, என்னென்ன உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.367/1ஏ, 367/1பி, 367/1சி, 367/1டி, 367/1இ, ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

2. சர்வே எண்.367/1ஏ யார் பெயரில் உள்ளது, எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சரவணன் பெயரில் உள்ளது, 20 ஏர்ஸ் ஆகும். சர்வே எண்.367/1பி யார் பெயரில் உள்ளது, எவ்வளவு விஸ்தீரணம் என்றால் இளமாறன் பெயரில் உள்ளது, 22 ஏர்ஸ் ஆகும். சர்வே எண்.367/1சி யார் பெயரில் உள்ளது, எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சரவணன் பெயரில் உள்ளது, 24.5 ஏர்ஸ் ஆகும். சர்வே எண்.367/1டி யார் பெயரில் உள்ளது, எவ்வளவு விஸ்தீரணம் என்றால் பார்குணன் பெயரில் உள்ளது, 1.17 ஏர்ஸ் ஆகும் சர்வே எண்.367/1இ யார் பெயரில் உள்ளது, எவ்வளவு விஸ்தீரணம் என்றால் ஆறுமுகம் பெயரில் உள்ளது, 51.50 ஏர்ஸ் ஆகும்.

3. மேற்படி புஞ்சை சர்வே எண்.367/1 உட்பிரிவு செய்யப்பட்டதில் எந்த உட்பிரிவில் கிணறு உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட விவரங்களை எந்த ஆவணத்தை பார்த்து நான் கூறினேன் என்றால் கிராம அடங்கல் ஆவணத்தை பார்த்து கூறினேன். மேற்படி அடங்கல் எந்த பசலி வருடத்தை சேர்ந்தது என்றால் 1435 பசலி வருடத்தை சேர்ந்ததாகும். இவ்வழக்கிற்கு நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும், ஆணையர் மற்றும் சர்வேயர் தாவா இடத்தை அளந்து பார்த்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார், அதில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. அடங்கலில் சர்வே எண்.367/1 உட்பிரிவுகள் யார் பெயரில் உள்ளதோ, அவர்கள் பெயரில்தான் பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 12.15**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,Arni
Arni